## மு.ப.நி. நோக்கு

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் (மு.ப.நி) பணியானது தெற்காசிய மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியங்களில் முகாமைத்துவ துறையில் கீர்த்திமிக்க மத்திய நிலையமொன்றாக மாறுவதற்கான அதன் அபிலாசையினால் உந்தப்பட்டிருக்கின்றது. இலங்கையில் முகாமைத்துவ துறையில் உயர் கல்வியை வழங்கி அபிவிருத்தி செய்வதற்கான கீர்த்திமிக்க மத்திய நிலையமொன்றாக மாறுவதற்கான நிறுவகத்தின் இதுவரையான முன்னேற்றத்தை தொடர்ந்த தர்க்கரீதியான நிலைப்பாடே இதுவாகும். நிறுவகத்திற்கான அடுத்த கட்ட அபிவிருத்தியானது பிராந்தியத்தில் முகாமைத்துவ துறையில் சிறப்பு பெறுவதற்கான அதன் அர்ப்பணிப்பாகும்.

## மு.ப.நி. பணிக்கூற்று

நோக்கு, முயற்சி, இணக்கம், வரையறை மற்றும் கவனிப்பு போன்ற ஐந்து வகை வழிமுறைகளினூடாக முகாமைத்துவ கல்வி, புத்தாக்கத்தை வடிவமைப்பதாகும். எமது பணி இந்த ஐந்து வழிமுறைகளிலும் எமது ஆண்கள் மற்றும் பெண்களது சக்திகளை வழிப்படுத்தக்கூடிய தலைவர்களை விருத்திசெய்து, சமுதாயத்தின் நன்மைக்காக தமது தொழில்முயற்சிகளில் பெறுமானங்களை உருவாக்குகின்ற முகாமையாளர்களை தயார்படுத்துவதாகும்.

## பெறுமானங்கள்

நவீன காலத்தில் நாகரீகமடைந்த மனித முன்னேற்றமானது பின்வருவனவற்றை வேண்டி நிற்கின்றது என்பதை மு.ப.நி முழுமையாக நம்புகின்றது:

- செயற்பாட்டு கற்றலினூடாக பலமாக ஆதரவளிக்கப்பட்ட அறிவு ரீதியான கல்வி
- செயலாற்றுகைக்கான திறனின் தொடரான அபிவிருத்தி
- ஒழுங்கமைக்கப்பட்ட தொழில்வாண்மைக்கான ஒப்பற்ற அர்ப்பணிப்பு
- பெறுமான உருவாக்கத்தின் நோக்கத்திற்கான புத்தாக்கத்திற்கான அர்ப்பணிப்பு

நிகழ்ச்சித்திட்டத்தின் கருத்தியலில் நான்கு கூறுகள் உள்ளன. நிறுவகத்திற்கு நுழையும் அனைவரும் இதனால் வார்க்கப்படவேண்டுமென நாம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

மேற்குறிப்பிட்ட நன்மைகள் ஐந்து-முனை கூட்டாண்மை பெறுமான முறையினால் பிணைக்கப்பட்டிருக்கின்றன.

- நாம் செய்கின்ற அனைத்து விடயங்களிலும் நடுநிலைமை வகித்தல்
- பெறுமானமிக்க அறிவார்ந்த உருவாக்கத்தில் உட்சாகத்துடன் இருத்தல்
- அறிவுபெறுதல், பரப்புகையில் படைப்பாற்றல்தன்மை
- நாம் செய்கின்ற அனைத்து விடயங்களிலும் தொடரான மேம்பாடு
- எமது அனைத்து தீர்மானங்கள் மற்றும் நடவடிக்கைகளிலும் நேர்மைத்தன்மையும் வெளிப்படைத்தன்மையும்

## இலக்குகள்

அடுத்த ஐந்து வருடங்களுக்கான மு.ப.நி.நான்கு-முனை கூட்டாண்மை இலக்குகள் பின்வருமாறு:

- நிறுவகம் தொழிற்படுவதற்கு விரும்புகின்ற சந்தைகளில் போட்டியை முறியடித்து, முன்னணியில் தொடர்ந்தும் இருத்தல் - தேசத்தின் வியாபார பாடசாலையாக தொடர்ந்தும் இருத்தல்.

- முகாமைத்துவ கற்கையின் வளர்ந்துவருகின்ற துறைகளுக்கு கற்கையின் தேசிய நீரோட்ட நிகழ்ச்சித்திட்டங்களில் அதை விரிவுபடுத்தி, நிறுவகத்தின் பொருத்தப்பாட்டை அதிகரித்தல்.

- அமைப்பின் நடத்தையூடாக தெரிவுசெய்யப்பட்ட துறைகளில் முகாமைத்துவ திறன்களை மேம்படுத்துதல் - குறிப்பான, குறுங்கால நிறைவேற்று அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்.

- கற்கை நிகழ்ச்சித்திட்டங்களின் பொருத்தப்பாட்டையும் தரத்தையும் தொடராக அதிகரித்தல்.

**அட்டவணை** 7: மீண்டெலும் செலவினம் : 2010(ரூ) 2011(ரூ) 2012 (ரூ)

| விடயம் | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|
| அ. ஆள்சார் செலவினங்கள் | 19,243,443 | 24,133,316 | 27,170,448 |
| ஆ. போக்குவரத்து | 1,681,218 | 3,115,621 | 3,232,195 |
| இ. வழங்கல்கள் | 6,028,785 | 5,353,740 | 7,509,525 |
| ஈ. பராமரிப்பு | 3,150,345 | 4,120,723 | 3,181,931 |
| உ. ஒப்பந்த சேவைகள் | 13,625,720 | 14,572,852 | 17,360,808 |
| ஊ. ஏனையவை | 24,304,280 | 18,588,791 | 35,259,373 |
| எ. கருத்திட்ட இயற்கை செலவினம் | 15,224,206 | 20,827,188 | 29,852,508 |
| மொத்த செலவினம் | 83,257,997 | 90,712,231 | 103,262,235 |

மூலம் : மு.ப.நி. தரவுத்தளம்

**அட்டவணை 8 இல் ஒப்பீட்டு மூலதனச் செலவினம் காட்டப்படுகிறது.**

**அட்டவணை 8: மூலதனச் செலவினம்**

| விடயம் | 2010 (ரூ) | 2011 (ரூ) | 2012 (ரூ) |
|---|---|---|---|
| அ. தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் கையகப்படுத்தல் | 4,785,565 | 3,229,540 | 4,535,905 |
| ஆ. பொறித்தொகுதிகள் கையகப்படுத்தல் | 38,915 | - | 5,676,652 |
| இ. கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் கையகப்படுத்தல் | - | - | - |
| ஈ. ஏனையவை (நூலக புத்தகங்கள், மோட்டார் வாகனம், பட்டமளிப்பு ஆடை) | 1,474,784 | 10,073,420 | 649,320 |
| உ. காணி மற்றும் கட்டிடங்களின் புனர்நிர்மாணம் மற்றும் புத்தாக்கம் | 7,845,552 | 3,243,526 | 282,373 |
| மொத்தம் | 14,144,816 | 16,546,486 | 11,144,250 |

மூலம் : மு.ப.நி. தரவுத்தளம்

**அட்டவணை 9 இல் உள்ளூர் நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் காட்டப்படுகின்றன.**

**அட்டவணை 9: கருத்திட்டங்கள் (உள்ளூர்)**

| பெயர் மற்றும் விபரங்கள் | கடன் / கொடை | நிதியளிப்பு முகவராண்மை | TCE ரூபா | RFA ரூபா | DF ரூபா |
|---|---|---|---|---|---|
| e-ஆளுகை நிகழ்ச்சித்திட்டத்தில் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா | கொடை | த.தொ.தொ.மு. இலங்கை | 34,939,995 | | |
| மொத்தம் | | | 34,939,995 | | |

மூலம் : மு.ப.நி. தரவுத்தளம்

**அட்டவணை 11 இல் செலவினத்தின் ஒப்பீட்டு நிதிசார் முன்னேற்றம் காட்டப்பட்டுள்ளது.**

அட்டவணை **11:** பௌதீக முன்னேற்றம் (செலவினம்)

| விடயம் | 2012 இல் ஏற்பாடு ரூபா | 2012 இல் செலவினம் ரூபா | சேமிப்புகள்/ மிகை ரூபா |
|---|---|---|---|
| அ. மீண்டெலுபவை தவிர கருத்திட்டம் | 120,646,000 | 93,714,280 | (2,920,788) |
| ஆ. மூலதனம் தவிர கருத்திட்டம் | 13,500,000 | 11,144,250 | 2,355,750 |
| இ. கருத்திட்டம் – உள்நாட்டு நிதியளிப்பு | - | - | - |
| ஈ. கருத்திட்டம் – வெளிநாட்டு நிதியளிப்பு | 15,557,946 | 15,557,946 | - |
| மொத்தம் | 149,703,946 | 120,416,476 | (525,038) |

மூலம் : மு.ப.நி. தரவுத்தளம்

**அட்டவணை 12 இல் பிறப்பிக்கப்பட்ட வருமானத்தின் ஒப்பீட்டு நிதிசார் முன்னேற்றம் காட்டப்படுகின்றது.**

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் பிரிவு 108 (1) இனதும் பிரிவு 19 இன் பிரகாரம் விசேட கட்டளைச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிறுவகத்தின் 2012 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்ககத்துடன் இணைக்கப்பட்ட பட்டப்பின்படிப்பு முகாமைத்துவ நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைம அதிபதியின் அறிக்கை தொடர்பாக பட்டப்பின்படிப்பு முகாமைத்துவ நிறுவகத்தினால் வழங்கப்பட்ட விளக்கங்கள்.

2.2.1. உயர் கணக்கீட்டு நடைமுறைகள்

நிலையான சொத்துக்களின் மீள்மதிபீட்டுப் பணி விலைமதிப்பக திணைக்களத்திற்கு குறித்துரைக்கப்பட்டிருப்பதோடு மீள்மதிப்பீடு இடம்பெற்று வருகின்றது. மீள்மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப்அபற்றதன் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிகள் கணக்களுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்படும்.

2.2.2. செலுத்தவேண்டிய மற்றும் பெறவேண்டிய கணக்குகள்

(அ) ரூபா 1,599,707 மொத்த கட்டுக்காப்பு தொகையில் ரூபா 112,887.50 தொகை 2013 சனவரியில் விடுவிக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பின் கீழான ஒப்பந்ததாரரத்கள் ஒப்பந்த கடப்பாடுகளுக்கு இயைந்துசெல்லாமை தோன்றுவதால் வருமானத்திற்கு நிலுவை கட்டுக்காப்பு தொகையை வரவு வைப்பதற்கு 2013 இல் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆ) உரிய விசாரணைகள் முடியும் வரை சர்வதேச கிளையின் வகைபிரிக்கப்படாத அட்டுறு செலவினங்களின் விபரங்களை பெற்றுக்கொள்ளவதில் சிக்கலொன்று காணப்படுகின்றது.

## 2.2.3 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை

சர்வதேச கிளையின் உரிய விசாரணைகள் முடியும் வரை அந்த பிரிவின் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளின் நிலுவைகள் தொடர்பாக விபரங்களை பெற்றுக்கொள்ளவதில் சிக்கலொன்று காணப்படுகின்றது.

## 2.2.4. சட்டம், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இயைந்துசெல்லாமை.

(அ) ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவு தொடர்பான தகவல் கணனி முறைமையூடாக ஆவணப்படுத்தபடுகின்றமையினால் இந்த குறைபாடு நிகழ்ந்துள்ளது.2013 சனவரியிலிருந்து இந்த குறைபாட்டை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ). அனைத்து பொருட்பட்டியல் பொருட்களினதும் விபரங்கள் கணனிமயப்படுத்தப்பட்டிருக்கின்றன. பதவியினர் வரையரை, வேலைப்பளு காரணமாக அளவாய்வு சபையை நடாத்துவதில் தாமதமொன்று காணப்பட்டிருக்கின்றபோதிலும் அனைத்து பொருட்களினதும் அமைவிடங்கள் அடையாளங்காணப்பட்டிருக்கின்றன, அவை அவற்றுக்குரிய குறியிட்டு இலக்கங்கள் ஒதுக்கப்பட்டு உரிய முறையில் பட்டியலிடப்பட்டிருக்கின்றன. 2013 இல் ஒரு அளவாய்வு சபையை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

4.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

அ) இது தொடர்பில் நிறுவகத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் விளக்கம் அளிக்கப்பட்டிருக்கினறது2013 சனவரியிலிருந்து உழியர்களின் வருகை உயர் திருப்திகர மட்டத்தை எட்டியது. 2013 சனவரியிலிரந்து உழியர்களின் வருகை தொடர்பில் நிருவாக நடைமுறைகளின் குறிப்பீடுகளை கடுமையாக பின்பற்றுவதற்கு நடவடிக்க எடுக்கப்படும்.

